4. அறிவிப்பு.

உரிமைப் பிரச்சினை எடுத்துக்கொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக் கொள்வதாக சொல்லியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் இல்லை. ஆகவே, நாளை எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னேனே தவிர, எடுத்துக் கொள்ளப்போவதில்லை என்று நான் சொல்லவில்லை.

(முற்பகல் 10.00)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். அதற்கு வேண்டிய உறுப்பினர் மதிப்பிற்குரிய உகம்சந்த் அவர்கள் வரவில்லை என்று சொல்கிறீர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொருவரும் வரவில்லை. யசோதா அம்மையார் அவர்களும் வரவில்லை. உகம்சந்த் அவர்களும் வரவில்லை. அவர்கள் இரண்டு பேர்களும் அந்தப் பிரச்சினையிலே சம்பந்தப்பட்டவர்கள். அவர்களும் இருக்கிறபோது எடுத்துக்கொண்டால் அது முறையாக இருக்கும்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை யசோதா அம்மையார் மீதல்ல; நான் கொடுத்திருப்பது உகம்சந்த் அவர்கள் மீது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அல்ல, உகம்சந்த் அவர்களின் பதிலும் தேவையாக இருக்கலாம்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, உகம்சந்த் அவர்கள் வரவில்லை என்று கூறுகிறீர்கள் . . . .

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, உகம்சந்த் அவர்கள் வர வில்லை என்று இன்றைக்கு சமாதானம் சொல்கிறீர்கள். அன்றைக்கு திரு. ரகுமான்கான் வராதபோது எப்படி எடுத்துக் கொண்டீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரகுமான்கான் அவர்களிடத்திலே சொன்னேன். அவரிடத்திலே கேட்டிருக்கிறேன். நாளைக்கு உங்கள் பிரச்சினை வருகிறது; வரவேண்டும் என்று சொன்னேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, உகம்சந்த் அவர்கள் மீது தரப்பட்டிருக்கிற உரிமைப் பிரச்சினையைத் தொடர்ந்து பத்து நாட்களாக

தள்ளிப்போட்டுக்கொண்டே வருகிற காரணத்தால், அதைக் கண்டிக்கிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் இப்போது தற்காலிகமாக வெளிநடப்பு செய்து காட்டுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருவரம்பூர் பாய்லர் தொழிற்சாலை தொழிலாளி மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ரா. உமாநாத், இரா. கருப்பையா, ப. செல்வமூர்த்தி என்கிற செல்வம், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர்—

"சென்ற 3-4-1981 அன்று திருச்சி மாவட்டம் திருவரம்பூரில் திரு. எஸ். யோகன்னன் என்கிற பாய்லர் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளி மர்மமாகக் கொலை செய்யப்பட்டுள்ளதால் பாய்லர் தொழிற் சாலையில் வேலை செய்யும் தொழிலாளிகள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களுடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3-4-1981 அன்று ஒரு மாட்டு வண்டியில் ஒரு பிணத்தை கொண்டு வந்து ஒரு சாதாரண இடத்தில், ஜனங்கள் இல்லாத ஒரு பிரதேசத்தில் போட்டு விட்டு ஓடிப் போய் விட்டார்கள் என்ற செய்தி பி.எச்.இ.எல். நிறுவனத்தில் பணி செய்யும் ஏராளமான தொழிலாளிகளுக்குக் கிடைத்ததும், அந்த வட்டா ரத்தில் இருக்கிற பொதுமக்கள் காதுக்கு எட்டியதும், ஏராளமான தொழி லாளர்களும், மக்களும் அங்கே போய்ப் பார்த்து, பி.எச்.இ.எல். நிறுவனத்தில் வேலை செய்து கொண்டு வந்திருக்கிற யோகன்னன் என்கிறவருடைய 'டெட் பாடி',—பிணத்தை அவர்கள் அந்த இடத்திலே கண்டார்கள். அந்த யோகன்னன் என்ற தொழிலாளி நீண்ட நாட்களாக பி.எச்.இ.எல்.-லில் வேலை பார்த்திருக்கிறார். அங்கே இருக்கக்கூடிய ஐ.என்.டி.யு.சி.-யில் அங்கத் தினராகவும் இருக்கக்கூடிய அந்தத் தொழிலாளி; அவருடைய பிணத்தைப் பார்த்திருக்கக்கூடிய தொழிலாளிகளும் சரி, மக்களும் சரி அவருடைய பிணத் தினுடைய உடம்பில் பல வெட்டு காயங்களைப் பார்த்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அந்தப் பிணத்தைத் திருட்டுத்தனமாக ஒரு மாட்டு வண்டியில் கொண்டு வந்து, தெரியாத ஆட்கள் கொண்டு வந்து போட்டு விட்டு ஓடிவிட்